விடுநர்
ஆணையர்,
ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்ககம்,
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,
சென்னை–15.

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
அனைத்து மாவட்டங்கள்,

**ந.க.எண்.6196/2022/மகாதேஊவேஉ தி 1 – 1, நாள்:17.03.2023.**

ஐயா/அம்மையீர்,

பொருள்: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – 2022–23 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – வட்டார நாற்றங்கால், முருங்கை நாற்றங்கால் மற்றும் தோட்டக்கலை நாற்றங்கால் பண்ணைகள் தொடர்பான நிலையான செயல்முறை வெளியிடுதல் – தொடர்பாக.

*******

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2022–23 –ஆம் ஆண்டில் வட்டார நாற்றங்கால், முருங்கை நாற்றங்கால் மற்றும் தோட்டக்கலை நாற்றங்கால் பண்ணைகளை சிறப்பாக அமைப்பதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் தக்க நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இதனை தொடர்புடைய அனைத்து களப்பணியாளர்களுக்கும் அனுப்புவதோடு இதில் கண்டுள்ள நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: மேற்கண்டவாறு

ஆணையருக்காக

பெறுநர்

1. அரசு முதன்மைச் செயலர்,
   ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை–09.
2. கூடுதல் ஆட்சியர்(வ.) / திட்ட இயக்குநர்,
   மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
   அனைத்து மாவட்டங்கள்.
3. மேலாண்மை இயக்குனர்,
   தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
   சென்னை –34.

## வட்டார அளவிலான நாற்றங்கால் பண்ணைகள் – நிலையான செயல்முறை வெளியிடுதல்

ஊரகப்பகுதிகளை பசுமையாக்கவும் சுற்றுச்சூழலைப்பாதுகாக்கவும், ஊராட்சி மற்றும் அரசு நிலங்கள், அரசு நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பொதுப் பூங்காக்கள் மற்றும் ஊரகச் சாலைகளின் இருமருங்கிலும் 69 இலட்சம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மழை மற்றும் வெள்ளக் காலங்களில் ஏரிகள் மற்றும் வாய்க்கால்களின் வரப்பினைப் பாதுகாக்கவும், ஊரகப் பகுதிகளில் பனைப் பொருட்கள் சார்ந்த வேலை வாய்ப்பினை பெருக்கவும், 25 இலட்சம் பனை விதைகள் ஊன்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு தேவைப்படும் மரக்கன்றுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 388 வட்டார அளவிலான நாற்றங்கால் பண்ணைகள் மூலம் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. வட்டார அளவிலான நாற்றங்கால் பண்ணைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மகளிர் பங்களிப்பினை உயர்த்தவும், சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நாற்றங்காலில் புளி, வேம்பு, அரசு, தென்னை, புங்கை, பாதாம், பனை, இலந்தை, இலுப்பை, பூவரசு, தேக்கு, வில்வம் மற்றும் மயில்கொன்றை போன்ற பல தரப்பட்ட மரக்கன்றுகளை வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### I. நிலம் தேர்வு செய்தல் :

- வட்டார அளவிலான நாற்றங்கால் பண்ணை அமைப்பதற்கான நிலம் உள்ள ஊராட்சிகளை தேர்வு செய்திடல் வேண்டும்.
- அனுபவம் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழு உள்ள ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

- இடம் கிராம நிர்வாக அலுவலருடன் இணைந்து தேர்வு செய்திடல் வேண்டும்.
- நாற்றுகளை கொண்டு செல்வதற்கு எளிதான அணுகு சாலையுடன் கூடிய இடத்தினை நாற்றங்கால் பண்ணை அமைத்திட தேர்வு செய்திடல் வேண்டும்.
- தண்ணீர் வசதி மற்றும் வடிகால் வசதியுடன் கூடிய சமதளமான நிலமாக இருத்தல் வேண்டும்.

II. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழு அமைப்பு

- நாற்றங்கால் அமைத்து பராமரிக்கும் பணியினை இவ்வூராட்சியில் அமைந்துள்ள விருப்பம் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை உள்ளடக்கிய பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் இத்திட்டத்தை செயல்படுத்தும் முகவராக அமைக்கப்பட வேண்டும். ஏனெனில் நாற்றங்கால் வளர்ப்பின் வெற்றிக்கு ஊராட்சி அளவிளான கூட்டமைப்புகளின் பங்கு இன்றியமையாது.
- இக்கூட்டமைப்புகள் திட்ட இயக்குநர் (TNSRLM) அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கண்டறியப்பட்டவுடன் நாற்றங்கால் பண்ணையில் பணிபுரிய சுய உதவிக் குழுவில் இருக்கும் உறுப்பினர்களை தேர்வு செய்திடல் வேண்டும். இவர்கள் நாற்றங்கால் உற்பத்தி மற்றும் பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

III. நிர்வாக அனுமதி :

- ஊராட்சி நிலம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழுக்களை தேர்வு செய்தபின்னர், மாவட்ட ஆட்சியர் அவர்களால் நாற்றங்கால் அமைப்பதற்கு ஊராட்சி மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பெயர் குறிப்பிட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும்.

- நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட நகல் சம்மந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுயஉதவிக்குழுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விதை கொள்முதல் செய்தல் மண்கலவை தயாரிக்கும் முறை, நாற்றங்கால் படுக்கைகள் தயார்செய்தல், நாற்றங்கால் அமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்றவை தோட்டக்கலைத் துறையுடன் கலந்தாலோசித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆலோசனைகளை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வழங்கப்பட வேண்டும்.

IV. **நிதியளிப்பு முறை :**

முட்புதர்களை அகற்றுதல், நிலம் சமன்படுத்துதல், நாற்றங்கால் படுக்கைகள் தயாரித்தல், நீர்பாசனம், மண்கலவை தயார் செய்தல், விழல்புல் அகற்றுதல், விதை கொள்முதல் மற்றும் நாற்றங்கால் படுக்கையிலிருந்து பாலித்தின் பைகளுக்கு நாற்றுகளை மாற்றுதல், பாலித்தின் பைகளில் நேரடியாக விதைகளை விதைத்தல் போன்ற பணிகள் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

- சங்கிலிவேலி, நிழல் வலை, நீர் ஆதாரத்தை உருவாக்குதல், நெகிலிப் பைகள், விதைகள், வேலை உபகரணகருவிகள் பாதுகாப்பாக வைப்பதற்கு கொட்டகை போன்ற பணிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், 15வது நிதிக்குழு மானியம், ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

V. **சுய உதவிக்குழுக்களை தேர்வு செய்யும் முறை :**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட வேலை அடையாள அட்டை உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வேலை அடையாள அட்டை இல்லை என்றால், தகுதியுள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு புதிய வேலை அடையாள அட்டைகள்

வழங்கப்பட்டு இப்பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். போதுமான எண்ணிக்கையிலான சுய உதவிக் குழுக்களை ஒரே நேரத்தில் இப்பணியில் அமர்த்த வேண்டும். மேலும் போதுமான சுய உதவிக் குழு உறுப்பினர்களை இருப்பில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

- நன்கு பயிற்சி பெற்ற சுய உதவிக் குழுக்களை மட்டுமே நாற்றாங்கால் வளர்ப்புப் பணியில் ஈடுபடுத்துவதை உறுதி செய்யப்பட வேண்டும்.
- சம்பந்தப்பட்ட சுய உதவிக்குழு நாற்றாங்கால் வளர்ப்பிற்கான இடுபொருட்களைத் திரட்டுதல், விதைப்பதற்கான விதைகள் கொள்முதல் செய்தல் போன்ற ஏற்பாடுகளை செய்ய வேண்டும். குறைந்த பட்சம் 2000 நாற்றுகளை ஒவ்வொரு நாற்றாங்காலிலும் உற்பத்தி செய்ய வேண்டும். இதன்மூலம் நாற்றுகளை MGNREGS திட்டம், தனிநபர்கள், விவசாயிகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கும் விற்று சம்பந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வருமானத்தை ஈட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

VI. ஒவ்வொரு பங்குதாரரின் பொறுப்பு:

மாவட்ட பணி மேலாண்மை அலகு (DMMU):

1. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை அடையாளம் கண்டு இப்பணியினை மேற்கொள்ள திட்டமிடுதல் மற்றும் சுய உதவிக் குழுக்களை தேர்வு செய்தல்.
2. நாற்றாங்கால் பண்ணை அமைப்பதற்கான பயிற்சிகளை விவசாயம் மற்றும் தோட்டக்கலை துறையுடன் இணைந்து வழங்குதல்
3. தோட்டக்கலை நாற்றுகளை ஊரகப்பகுதிகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதை உறுதி செய்தல்.
4. நிதி விடுவிப்பினை கண்காணித்தல்.
5. நாற்று உற்பத்தி மற்றும் விநியோகம் போன்றவற்றை அவ்வப்போது சரிபார்த்தல்.
6. நாற்றாங்கால் பண்ணையினை பராமரிப்பதை கண்காணித்தல்
7. சமூக தணிக்கை பணிக்கு உதவி செய்தல்

வட்டார வளர்ச்சி அலுவலர்:

- சரியான நிலத்தினை அடையாளம் கண்டு தேர்வு செய்தல்.
- நிலத்தினை சமன்படுத்தி சங்கிலிவேலி, நிழல் வலை, நீர் ஆதாரத்தை உருவாக்கி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிடம் ஒப்படைத்தல்.
- MGNREGS அட்டவணை I பத்தி 5 ல் உள்ள தனிப்பட்ட பயனாளிகளை தேர்ந்தெடுத்து முன்னுரிமை வழங்குதல்
- சரியான நேரத்தில் நிதியினை விடுவித்தல்
- விதிமுறைகளுக்கு உட்பட்டு செலவுகள் மேற்கொள்வதை உறுதி செய்தல்
- சமூக தணிக்கை பணிக்கு உதவி செய்தல்

VII. சுய உதவிக்குழுக்கள் விதைகளை தேர்வு செய்தல்

- விதைகள் கொள்முதல் செய்யும் பொழுது அதிக முளைப்புத் திறனுள்ளதாகவும், வேகமாக வளரக்கூடியதுமான நல்ல தரமான விதைகளை தேர்ந்தெடுப்பதற்கு வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் பெற்று அதன்படி கொள்முதல் செய்யப்படவேண்டும்.

- அரசு விதைப் பண்ணைகள், தோட்டக்கலை மற்றும் வனத்துறை மூலம் தரமான விதைகள் பெற்றுக் கொள்ளலாம்.

- நாற்றுகளை மாசுபடாமல் பாதுகாக்க விதைகளை சூடோமோனாஸ் மற்றும் ட்ரைகோடெர்மாவிரிடி கொண்டு நேர்த்தி செய்ய வேண்டும்.
- உற்பத்தி செய்யப்படும் நாற்றுகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கு 10% முளைப்பு இழப்பினை கருத்தில் கொள்ள வேண்டும்.
- ஊட்டச்சத்துக்காக அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா அல்லது பஞ்சகவ்யா அல்லது ஜீவாம்ருதம் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

- ரசாயன உரப் பயன்பாட்டைத் தவிர்த்து இயற்கை திரவ உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும்.
- கரையான் தொல்லையைத் தவிர்க்க நாற்றங்கால் படுக்கையில் மாலத்தியான் அடுக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

**VIII. பண்ணை அமைக்கும் முறை:**

**நாற்றங்கால் தளம் அமைத்தல்:**

- புல், புதர்களை அகற்றி நிலத்தினை சமன்படுத்த வேண்டும்.
- நாற்றங்காலில் பாலித்தீன் பைகள், உரம் மற்றும் விதையினை சேமிக்க கொட்டகைகள், விதை முளைக்கும் படுக்கைகள், தண்ணீர் தொட்டி போன்றவைகளை அமைப்பதற்கு தேவையான இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

**நாற்றங்கால் படுக்கைகள்:**

- சமவெளிகளில் 10 மீ x 1 மீ அளவுகள் உள்ள படுக்கைகளும் மலைப்பகுதிகளில் 2 மீ x 1 மீ அளவுகள் உள்ள படுக்கைகளும் மண் மற்றும் மணல் 1 : 1 என்ற விகிதத்தில் கலந்து கிழக்கு – மேற்கு திசையில் அமைக்கப்படவேண்டும்.
- நாற்றாங்கால் படுக்கைகளுக்கு இடையில் குறைந்தபட்சம் 2அடி இடைவெளி விட்டு அமைக்கப்பட வேண்டும்.

**விதை விதைத்தல்:**

- நாற்றங்கால் படுக்கைகளில் விதைகளை பரவலாக தூவலாம் அல்லது படுக்கைகளின் குறுக்கே கோடுகளை அமைத்து அதில் விதைகளை ஊன்றலாம். 3 முதல் 6 மி. மீ ஆழத்தில் விதைகளை ஊன்ற வேண்டும்.
- விதைகள் முளைக்கும் வரை ஒரு நாளைக்கு இரண்டு முறை தண்ணீர் ஊற்ற வேண்டும்.

- குறு நாற்றுகளை கையாளுவதில் இழப்புகள் அதிகம் இருக்கும் என்பதால் பாலித்தீன் பைகளில் விதைப்பதற்கு நாற்றுகளின் வயது குறைந்தது ஒரு மாதமாக இருக்க வேண்டும்.

- வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க உலர்ந்த புல், மூங்கில் பாய், பனை ஓலைகள், வைக்கோல் ஆகியவற்றை கொண்டு நிழற்குடைகள் வடக்கு தெற்கு திசை நோக்கி சாய்ந்திருக்குமாறு அமைக்க வேண்டும்.

- விதைகள் நேரடியாகவும் பாலித்தீன் பைகளில் விதைக்கலாம். 22 செ.மீ x 10 செ.மீ அளவு கொண்ட துளையிட்ட பாலித்தீன் பைகளில் மண், மணல் மற்றும் உரம் 6 : 1 : 3 என்ற விகிதாசாரத்தில் கலந்து நிரப்பி சில நாட்கள் விட வேண்டும். விதை விதைக்கும் முந்தைய நாள் பைகளில் தண்ணீர் விட்டு ஒரு பைக்கு இரண்டு விதைகள் வீதம் விதைக்க வேண்டும். இரண்டு விதைகளும் முளைத்தால் ஒன்றை மற்றொரு காலி பாலித்தீன் பைகளில் மாற்ற வேண்டும். ஒட்டுதல் மற்றும் துளிர்த்தல் முறைகளையும் பின்பற்றலாம்.

- நாற்றுகள் நடப்படும் வரை களையெடுத்தல், நீர் பாய்ச்சுதல், உரமிடுதல், கடினப்படுத்துதல், நோய்கள் மற்றும் பூச்சிகளிலிருந்து பாதுகாத்தல் போன்ற பராமரிப்புகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

- 30 நாட்களுக்கு ஒரு முறை நாற்றுகளை இடம் மாற்றி வைக்க வேண்டும்
- ஒவ்வொரு பைக்கும் இடையில் நான்கு பக்கங்களிலும் இடைவெளி இருக்க வேண்டும்.
- குழாய் வழி நீர்ப்பாசனம், விதைகள் மற்றும் இளம் நாற்றுகளை சேதப்படுத்தும் என்பதால் பூ வாளி மூலம் மட்டுமே தண்ணீர் ஊற்ற வேண்டும்.

IX. இணையதளம் மற்றும் செயலியில் பதிவிடுதல்:

- நாற்றங்காலின் அமைவிடம், பரப்பளவு, வேலியின் வகை, நீர் ஆதாரம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு விவரங்கள் TNRD இணைய தளத்தில் பதிவிட வேண்டும்.
- மரக்கன்றுகள் வளர்ச்சி மரக்கன்றுகளின் இருப்பு எண்ணிக்கை, விநியோக விவரங்கள் நாற்றங்கால் செயலியில் பதிவிடப்பட வேண்டும்.
- நாற்றங்கால் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிடம் ஒப்படைக்கும் வரை ஓன்றியமேற்பார்வையாளர் நாற்றங்கால் செயலில் பணி முன்னேற்றம் குறித்து பதிவு செய்திட வேண்டும்.

ஆணையருக்காக

2/3/23

## முருங்கை நாற்றங்கால் பண்ணைகள் – நிலையான செயல்முறை வெளியிடுதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மகளிர் பங்களிப்பினை உயர்த்தவும், சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் புதிதாக 3500 முருங்கை நாற்றங்கால் பண்ணைகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இதன்மூலம் இரும்புச்சத்துக் குறைபாடில்லா தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் 21 இலட்சம் முருங்கை நாற்றுகள் வளர்க்கப்பட்டு மகளிர் சுயஉதவிக் குழுவினர் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள பயனாளிகளுக்கு தலா இரண்டு மரக்கன்றுகள் வீதம் வழங்க அறிவுறுத்தப்பட்டது.

I. **நிலம் தேர்வு செய்தல் :**

- நாற்றங்கால் பண்ணை அமைப்பதற்கான நிலம் உள்ள ஊராட்சிகளை தேர்வு செய்திடல் வேண்டும்.
- அனுபவம் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழு உள்ள ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.
- இடம் கிராம நிர்வாக அலுவலருடன் இணைந்து தேர்வு செய்திடல் வேண்டும்.
- நாற்றுகளை கொண்டு செல்வதற்கு எளிதான அணுகு சாலையுடன் கூடிய இடத்தினை நாற்றங்கால் பண்ணை அமைத்திட தேர்வு செய்திடல் வேண்டும்.
- தண்ணீர் வசதி மற்றும் வடிகால் வசதியுடன் கூடிய சமதளமான நிலமாக இருத்தல் வேண்டும்.

II. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழு அமைப்பு

- நாற்றங்கால் பராமரிக்கும் பணியினை இவ்வூராட்சியில் அமைந்துள்ள விருப்பம் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை உள்ளடக்கிய பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் இத்திட்டத்தை செயல்படுத்தும் முகவராக அமைக்கப்பட வேண்டும். ஏனெனில் நாற்றங்கால் வளர்ப்பின் வெற்றிக்கு ஊராட்சி அளவிளான கூட்டமைப்புகளின் பங்கு இன்றியமையாது.

- இக்கூட்டமைப்புகள் திட்ட இயக்குநர் (TNSRLM) அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கண்டறியப்பட்டவுடன் நாற்றங்கால் பண்ணையில் பணிபுரிய சுய உதவிக் குழுவில் இருக்கும் உறுப்பினர்களை தேர்வு செய்திடல் வேண்டும். இவர்கள் நாற்றங்கால் உற்பத்தி மற்றும் பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

III. நிர்வாக அனுமதி :

- ஊராட்சி நிலம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழுக்களை தேர்வு செய்தபின்னர், மாவட்ட ஆட்சியர் அவர்களால் நாற்றங்கால் அமைப்பதற்கு ஊராட்சி மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பெயர்களை குறிப்பிட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும்.

- நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட நகல் சம்மந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றம் சுயஉதவிக்குழுவினருக்கு வழங்கப்பட வேண்டும்.

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விதை கொள்முதல் செய்தல் மண்கலவை தயாரிக்கும் முறை, நாற்றங்கால் படுக்கைகள் தயார்செய்தல், நாற்றங்கால் அமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்றவை தோட்டக்கலைத் துறையுடன் கலந்தாலோசித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

ஆலோசனைகளை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வழங்கப்பட வேண்டும்.

IV. நிதியளிப்பு முறை :

முட்புதர்களை அகற்றுதல், நிலம் சமன்படுத்துதல், நாற்றங்கால் படுக்கைகள் தயாரித்தல், நீர்பாசனம், மண்கலவை தயார் செய்தல், விழல்புல் அகற்றுதல், விதை கொள்முதல் மற்றும் நாற்றங்கால் படுக்கையிலிருந்து பாலித்தின் பைகளுக்கு நாற்றுகளை மாற்றுதல், பாலித்தின் பைகளில் நேரடியாக விதைகளை விதைத்தல் போன்ற பணிகள் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

- சங்கிலிவேலி, நிழல் வலை, நீர் ஆதாரத்தை உருவாக்குதல், நெகிழிப் பைகள், விதைகள், வேலை உபகரணகருவிகள் பாதுகாப்பாக வைப்பதற்கு கொட்டகை போன்ற பணிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், 15வது நிதிக்குழு மானியம், ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

V. சுய உதவிக்குழுக்களை தேர்வு செய்யும் முறை :

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட வேலை அடையாள அட்டை உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வேலை அடையாள அட்டை இல்லை என்றால், தகுதியுள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு புதிய வேலை அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு இப்பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். போதுமான எண்ணிக்கையிலான சுய உதவிக் குழுக்களை ஒரே நேரத்தில் இப்பணியில் அமர்த்த வேண்டும். மேலும் போதுமான சுய உதவிக் குழு உறுப்பினர்களை இருப்பில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

- நன்கு பயிற்சி பெற்ற சுய உதவிக் குழுக்களை மட்டுமே நாற்றாங்கால் வளர்ப்புப் பணியில் ஈடுபடுத்துவதை உறுதி செய்யப்பட வேண்டும்.

- சம்பந்தப்பட்ட சுய உதவிக்குழு நாற்றாங்கால் வளர்ப்பிற்கான இடுபொருட்களைத் திரட்டுதல், விதைப்பதற்கான விதைகள் கொள்முதல் செய்தல் போன்ற ஏற்பாடுகளை செய்ய வேண்டும். குறைந்த பட்சம் 2000 நாற்றுகளை ஒவ்வொரு நாற்றாங்காலிலும் உற்பத்தி செய்ய வேண்டும். இதன்மூலம் நாற்றுகளை MGNREGS திட்டம், தனிநபர்கள், விவசாயிகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கும் விற்று சம்பந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வருமானத்தை ஈட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**VI. ஒவ்வொரு பங்குதாரரின் பொறுப்பு:**

**மாவட்ட பணி மேலாண்மை அலகு (DMMU):**

1. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை அடையாளம் கண்டு இப்பணியினை மேற்கொள்ள திட்டமிடுதல் மற்றும் சுய உதவிக் குழுக்களை தேர்வு செய்தல்.
2. நாற்றாங்கால் பண்ணை அமைப்பதற்கான பயிற்சிகளை விவசாயம் மற்றும் தோட்டக்கலை துறையுடன் இணைந்து வழங்குதல்
3. முருங்கை நாற்றுகளை சுய உதவிக்குழுக்கள் மற்றும் வீடு கட்டும் பயனாளிக்கு தலா இரண்டு நாற்றுகள் வழங்குவதை உறுதி செய்தல்.
4. நிதி விடுவிப்பினை கண்காணித்தல்.
5. நாற்று உற்பத்தி மற்றும் விநியோகம் போன்றவற்றை அவ்வப்போது சரிபார்த்தல்.
6. நாற்றாங்கால் பண்ணையினை பராமரிப்பதை கண்காணித்தல்
7. சமூக தணிக்கை பணிக்கு உதவி செய்தல்

**வட்டார வளர்ச்சி அலுவலர்:**

- சரியான நிலத்தினை அடையாளம் கண்டு தேர்வு செய்தல்
- நிலத்தினை சமன்படுத்தி சங்கிலிவேலி, நிழல் வலை, நீர் ஆதாரத்தை உருவாக்கி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிடம் ஒப்படைத்தல்.

- MGNREGS அட்டவணை I பத்தி 5 ல் உள்ள தனிப்பட்ட பயனாளிகளை தேர்ந்தெடுத்து முன்னுரிமை வழங்குதல்
- சரியான நேரத்தில் நிதியினை விடுவித்தல்
- விதிமுறைகளுக்கு உட்பட்டு செலவுகள் மேற்கொள்வதை உறுதி செய்தல்
- சமூக தணிக்கை பணிக்கு உதவி செய்தல்

**VII. சுய உதவிக்குழுக்கள் விதைகளை தேர்வு செய்தல்**

- விதைகள் கொள்முதல் செய்யும் பொழுது அதிக முளைப்புத் திறனுள்ளதாகவும், வேகமாக வளரக்கூடியதுமான நல்ல தரமான விதைகளை தேர்ந்தெடுப்பதற்கு வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் பெற்று அதன்படி கொள்முதல் செய்யப்படவேண்டும்.

- அரசு விதைப் பண்ணைகள், தோட்டக்கலை மற்றும் வனத்துறை மூலம் தரமான விதைகள் பெற்றுக் கொள்ளலாம்.

- KM1 PKM1, PKM2 ஆகிய முருங்கை விதை வகைகளை TNAU/KVK போன்ற நம்பகமான நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
- 2500 விதைகளைக் கொண்ட 1 Kg பாக்கெட்டினை நாற்றங்கால் பணிக்கு பயன்படுத்தலாம்.
- நாற்றுகளை மாசுபடாமல் பாதுகாக்க விதைகளை சூடோமோனாஸ் மற்றும் ட்ரைகோடெர்மாவிரிடி கொண்டு நேர்த்தி செய்ய வேண்டும்.
- உற்பத்தி செய்யப்படும் நாற்றுகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கு 10% முளைப்பு இழப்பினை கருத்தில் கொள்ள வேண்டும்.
- ஊட்டச்சத்துக்காக அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா அல்லது பஞ்சகவ்யா அல்லது ஜீவாம்ருதம் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

- ரசாயன உரப் பயன்பாட்டைத் தவிர்த்து இயற்கை திரவ உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும்.
- கரையான் தொல்லையைத் தவிர்க்க நாற்றங்கால் படுக்கையில் மாலத்தியான் அடுக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

**VIII. பண்ணை அமைக்கும் முறை:**

**நாற்றங்கால் தளம் அமைத்தல்:**

- புல், புதர்களை அகற்றி நிலத்தினை சமன்படுத்த வேண்டும்.
- நாற்றங்காலில் பாலித்தீன் பைகள், உரம் மற்றும் விதையினை சேமிக்க கொட்டகைகள், விதை முளைக்கும் படுக்கைகள், தண்ணீர் தொட்டி போன்றவைகளை அமைப்பதற்கு தேவையான இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

**நாற்றங்கால் படுக்கைகள்:**

- சமவெளிகளில் 10 மீ x 1 மீ அளவுகள் உள்ள படுக்கைகளும் மலைப்பகுதிகளில் 2 மீ x 1 மீ அளவுகள் உள்ள படுக்கைகளும் மண் மற்றும் மணல் 1 : 1 என்ற விகிதத்தில் கலந்து கிழக்கு – மேற்கு திசையில் அமைக்கப்படவேண்டும்.
- நாற்றாங்கால் படுக்கைகளுக்கு இடையில் குறைந்தபட்சம் 2அடி இடைவெளி விட்டு அமைக்கப்பட வேண்டும்.

**விதை விதைத்தல்:**

- நாற்றங்கால் படுக்கைகளில் விதைகளை பரவலாக தூவலாம் அல்லது படுக்கைகளின் குறுக்கே கோடுகளை அமைத்து அதில் விதைகளை ஊன்றலாம். 3 முதல் 6 மி. மீ ஆழத்தில் விதைகளை ஊன்ற வேண்டும்.
- விதைகள் முளைக்கும் வரை ஒரு நாளைக்கு இரண்டு முறை தண்ணீர் ஊற்ற வேண்டும்.

- குறு நாற்றுகளை கையாளுவதில் இழப்புகள் அதிகம் இருக்கும் என்பதால் பாலித்தீன் பைகளில் விதைப்பதற்கு நாற்றுகளின் வயது குறைந்தது ஒரு மாதமாக இருக்க வேண்டும்.

- வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க உலர்ந்த புல், மூங்கில் பாய், பனை ஓலைகள், வைக்கோல் ஆகியவற்றை கொண்டு நிழற்குடைகள் வடக்கு தெற்கு திசை நோக்கி சாய்ந்திருக்குமாறு அமைக்க வேண்டும்.

- விதைகள் நேரடியாகவும் பாலித்தீன் பைகளில் விதைக்கலாம். 22 செ.மீ x 10 செ.மீ அளவு கொண்ட துளையிட்ட பாலித்தீன் பைகளில் மண், மணல் மற்றும் உரம் 6 : 1 : 3 என்ற விகிதாசாரத்தில் கலந்து நிரப்பி சில நாட்கள் விட வேண்டும். விதை விதைக்கும் முந்தைய நாள் பைகளில் தண்ணீர் விட்டு ஒரு பைக்கு இரண்டு விதைகள் வீதம் விதைக்க வேண்டும். இரண்டு விதைகளும் முளைத்தால் ஒன்றை மற்றொரு காலி பாலித்தீன் பைகளில் மாற்ற வேண்டும். ஒட்டுதல் மற்றும் துளிர்த்தல் முறைகளையும் பின்பற்றலாம்.

- நாற்றுகள் நடப்படும் வரை களையெடுத்தல், நீர் பாய்ச்சுதல், உரமிடுதல், கடினப்படுத்துதல், நோய்கள் மற்றும் பூச்சிகளிலிருந்து பாதுகாத்தல் போன்ற பராமரிப்புகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

- 30 நாட்களுக்கு ஒரு முறை நாற்றுகளை இடம் மாற்றி வைக்க வேண்டும்
- ஒவ்வொரு பைக்கும் இடையில் நான்கு பக்கங்களிலும் இடைவெளி இருக்க வேண்டும்.
- குழாய் வழி நீர்ப்பாசனம், விதைகள் மற்றும் இளம் நாற்றுகளை சேதப்படுத்தும் என்பதால் பூ வாளி மூலம் மட்டுமே தண்ணீர் ஊற்ற வேண்டும்.

IX. முருங்கை நாற்றங்கால் பராமரித்தல்:

- முருங்கை நாற்றங்காலில் கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் முருங்கைச்செடி விநியோகிக்கும் வரை முருங்கை

வளர்க்கப்பட வேண்டும். அதன் பின்னர், பப்பாளி, நெல்லி, சீத்தாப்பழம் போன்ற பழ வகைகள் விதைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

X. இணையதளம் மற்றும் செயலியில் பதிவிடுதல்:

- நாற்றங்காலின் அமைவிடம், பரப்பளவு, வேலியின் வகை, நீர் ஆதாரம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு விவரங்கள் TNRD இணைய தளத்தில் பதிவிட வேண்டும்.
- மரக்கன்றுகள் வளர்ச்சி மரக்கன்றுகளின் இருப்பு எண்ணிக்கை, விநியோக விவரங்கள் நாற்றங்கால் செயலியில் பதிவிடப்பட வேண்டும்.
- நாற்றங்கால் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிடம் ஒப்படைக்கும் வரை ஒன்றியமேற்பார்வையாளர் நாற்றங்கால் செயலில் பணி முன்னேற்றம் குறித்து பதிவு செய்திட வேண்டும்.
- அதன்பிறகு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயலில் பணி முன்னேற்றம் குறித்து பதிவு செய்திட வேண்டும். அதனை ஊராட்சி ஒன்றியமேற்பார்வையாளர் கண்காணித்தல் வேண்டும்.

21.3.23

ஆணையருக்காக

20/3/23

## தோட்டக்கலை நாற்றங்கால் பண்ணைகள் – நிலையான செயல்முறை வெளியிடுதல்

ஊரகப்பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் சிறு/குறு மற்றும் பட்டியலின/பழங்குடியின விவசாயிகளின் நிலத்தின் ஒரு பகுதியில்/மண்வரப்புகளை சுற்றிலும் மண்ணின் தன்மைக்கேற்ப நாவல், மாதளை, மா, பலா, தென்னை, நெல்லி, கொய்யா சப்போட்டா, எலுமிச்சை, நாற்றங்காய் போன்ற மரக்கன்றுகள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 20 விவசாயிகள் என்ற வீதத்தில் நிலமேம்பாட்டுப் பணிகளோடு இணைந்து மரக்கன்றுகள் நடும்பணி, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து 8.45 இலட்சம் பழ மரக்கன்றுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு தேவைப்படும் மரக்கன்றுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 1500 தோட்டக்கலை நாற்றங்கால் பண்ணைகள் மூலம் வழங்க அறிவுருத்தப்பட்டுள்ளது. தோட்டக்கலை நாற்றங்கால் பண்ணைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மகளிர் பங்களிப்பினை உயர்த்தவும், சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

I. **நிலம் தேர்வு செய்தல் :**

- நாற்றங்கால் பண்ணை அமைப்பதற்கான நிலம் உள்ள ஊராட்சிகளை தேர்வு செய்திடல் வேண்டும்.
- அனுபவம் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழு உள்ள ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.
- இடம் கிராம நிர்வாக அலுவலருடன் இணைந்து தேர்வு செய்திடல் வேண்டும்.

- நாற்றுகளை கொண்டு செல்வதற்கு எளிதான அணுகு சாலையுடன் கூடிய இடத்தினை நாற்றங்கால் பண்ணை அமைத்திட தேர்வு செய்திடல் வேண்டும்.
- தண்ணீர் வசதி மற்றும் வடிகால் வசதியுடன் கூடிய சமதளமான நிலமாக இருத்தல் வேண்டும்.

II. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழு அமைப்பு

- நாற்றங்கால் அமைத்து பராமரிக்கும் பணியினை இவ்வூராட்சியில் அமைந்துள்ள விருப்பம் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை உள்ளடக்கிய பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் இத்திட்டத்தை செயல்படுத்தும் முகவராக அமைக்கப்பட வேண்டும். ஏனெனில் நாற்றங்கால் வளர்ப்பின் வெற்றிக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பங்கு இன்றியமையாது.
- இக்கூட்டமைப்புகள் திட்ட இயக்குநர் (TNSRLM) அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கண்டறியப்பட்டவுடன் நாற்றங்கால் பண்ணையில் பணிபுரிய சுய உதவிக் குழுவில் இருக்கும் உறுப்பினர்களை தேர்வு செய்திடல் வேண்டும். இவர்கள் நாற்றங்கால் உற்பத்தி மற்றும் பராமரிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

III. நிர்வாக அனுமதி :

- ஊராட்சி நிலம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழுக்களை தேர்வு செய்தபின்னர், மாவட்ட ஆட்சியர் அவர்களால் நாற்றங்கால் அமைப்பதற்கு ஊராட்சி மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பெயர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயின் பெயர் குறிப்பிட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும்.

- நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட நகல் சம்மந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சுயஉதவிக்குழு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விதை கொள்முதல் செய்தல் மண்கலவை தயாரிக்கும் முறை, நாற்றங்கால் படுக்கைகள் தயார்செய்தல், நாற்றங்கால் அமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்றவை தோட்டக்கலைத் துறையுடன் கலந்தாலோசித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆலோசனைகளை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வழங்கப்பட வேண்டும்.

IV. **நிதியளிப்பு முறை :**

முட்புதர்களை அகற்றுதல், நிலம் சமன்படுத்துதல், நாற்றங்கால் படுக்கைகள் தயாரித்தல், நீர்பாசனம், மண்கலவை தயார் செய்தல், விழல்புல் அகற்றுதல், விதை கொள்முதல் மற்றும் நாற்றங்கால் படுக்கையிலிருந்து பாலித்தின் பைகளுக்கு நாற்றுகளை மாற்றுதல், பாலித்தின் பைகளில் நேரடியாக விதைகளை விதைத்தல் போன்ற பணிகள் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

- சங்கிலிவேலி, நிழல் வலை, நீர் ஆதாரத்தை உருவாக்குதல், நெகிலிப் பைகள், விதைகள், வேலை உபகரணகருவிகள் பாதுகாப்பாக வைப்பதற்கு கொட்டகை போன்ற பணிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், 15வது நிதிக்குழு மானியம், ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

V. **சுய உதவிக்குழுக்களை தேர்வு செய்யும் முறை :**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட வேலை அடையாள அட்டை உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வேலை அடையாள அட்டை இல்லை என்றால், தகுதியுள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு புதிய வேலை அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு இப்பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். போதுமான எண்ணிக்கையிலான சுய உதவிக் குழுக்களை ஒரே நேரத்தில் இப்பணியில்

அமர்த்த வேண்டும். மேலும் போதுமான சுய உதவிக் குழு உறுப்பினர்களை இருப்பில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

- நன்கு பயிற்சி பெற்ற சுய உதவிக் குழுக்களை மட்டுமே நாற்றாங்கால் வளர்ப்புப் பணியில் ஈடுபடுத்துவதை உறுதி செய்யப்பட வேண்டும்.
- சம்பந்தப்பட்ட சுய உதவிக்குழு நாற்றாங்கால் வளர்ப்பிற்கான இடுபொருட்களைத் திரட்டுதல், விதைப்பதற்கான விதைகள் கொள்முதல் செய்தல் போன்ற ஏற்பாடுகளை செய்ய வேண்டும். குறைந்த பட்சம் 2000 நாற்றுகளை ஒவ்வொரு நாற்றாங்காலிலும் உற்பத்தி செய்ய வேண்டும். இதன்மூலம் நாற்றுகளை MGNREGS திட்டம், தனிநபர்கள், விவசாயிகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கும் விற்று சம்பந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வருமானத்தை ஈட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**VI. ஒவ்வொரு பங்குதாரரின் பொறுப்பு:**

**மாவட்ட பணி மேலாண்மை அலகு (DMMU):**

1. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை அடையாளம் கண்டு இப்பணியினை மேற்கொள்ள திட்டமிடுதல் மற்றும் சுய உதவிக் குழுக்களை தேர்வு செய்தல்.
2. நாற்றாங்கால் பண்ணை அமைப்பதற்கான பயிற்சிகளை விவசாயம் மற்றும் தோட்டக்கலை துறையுடன் இணைந்து வழங்குதல்
3. தோட்டக்கலை நாற்றுகளை ஊரகப்பகுதிகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதை உறுதி செய்தல்.
4. நிதி விடுவிப்பினை கண்காணித்தல்.
5. நாற்று உற்பத்தி மற்றும் விநியோகம் போன்றவற்றை அவ்வப்போது சரிபார்த்தல்.
6. நாற்றாங்கால் பண்ணையினை பராமரிப்பதை கண்காணித்தல்
7. சமூக தணிக்கை பணிக்கு உதவி செய்தல்

**வட்டார வளர்ச்சி அலுவலர்:**

- சரியான நிலத்தினை அடையாளம் கண்டு தேர்வு செய்தல்.

- நிலத்தினை சமன்படுத்தி சங்கிலிவேலி, நிழல் வலை, நீர் ஆதாரத்தை உருவாக்கி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிடம் ஒப்படைத்தல்.
- MGNREGS அட்டவணை I பத்தி 5 ல் உள்ள தனிப்பட்ட பயனாளிகளை தேர்ந்தெடுத்து முன்னுரிமை வழங்குதல்
- சரியான நேரத்தில் நிதியினை விடுவித்தல்
- விதிமுறைகளுக்கு உட்பட்டு செலவுகள் மேற்கொள்வதை உறுதி செய்தல்
- சமூக தணிக்கை பணிக்கு உதவி செய்தல்

VII. சுய உதவிக்குழுக்கள் விதைகளை தேர்வு செய்தல்

- விதைகள் கொள்முதல் செய்யும் பொழுது அதிக முளைப்புத் திறனுள்ளதாகவும், வேகமாக வளரக்கூடியதுமான நல்ல தரமான விதைகளை தேர்ந்தெடுப்பதற்கு வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் பெற்று அதன்படி கொள்முதல் செய்யப்படவேண்டும்.
- அரசு விதைப் பண்ணைகள், தோட்டக்கலை மற்றும் வனத்துறை மூலம் தரமான விதைகள் பெற்றுக் கொள்ளலாம்.
- நாற்றுகளை மாசுபடாமல் பாதுகாக்க விதைகளை சூடோமோனாஸ் மற்றும் ட்ரைகோடெர்மாவிரிடி கொண்டு நேர்த்தி செய்ய வேண்டும்.
- உற்பத்தி செய்யப்படும் நாற்றுகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கு 10% முளைப்பு இழப்பினை கருத்தில் கொள்ள வேண்டும்.
- ஊட்டச்சத்துக்காக அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா அல்லது பஞ்சகவ்யா அல்லது ஜீவாம்ருதம் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
- ரசாயன உரப் பயன்பாட்டைத் தவிர்த்து இயற்கை திரவ உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும்.
- கரையான் தொல்லையைத் தவிர்க்க நாற்றங்கால் படுக்கையில் மாலத்தியான் அடுக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

VIII. பண்ணை அமைக்கும் முறை:

**நாற்றங்கால் தளம் அமைத்தல்:**

- புல், புதர்களை அகற்றி நிலத்தினை சமன்படுத்த வேண்டும்.
- நாற்றங்காலில் பாலித்தீன் பைகள், உரம் மற்றும் விதையினை சேமிக்க கொட்டகைகள், விதை முளைக்கும் படுக்கைகள், தண்ணீர் தொட்டி போன்றவைகளை அமைப்பதற்கு தேவையான இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

**நாற்றங்கால் படுக்கைகள்:**

- சமவெளிகளில் 10 மீ x 1 மீ அளவுகள் உள்ள படுக்கைகளும் மலைப்பகுதிகளில் 2 மீ x 1 மீ அளவுகள் உள்ள படுக்கைகளும் மண் மற்றும் மணல் 1 : 1 என்ற விகிதத்தில் கலந்து கிழக்கு – மேற்கு திசையில் அமைக்கப்படவேண்டும்.
- நாற்றாங்கால் படுக்கைகளுக்கு இடையில் குறைந்தபட்சம் 2அடி இடைவெளி விட்டு அமைக்கப்பட வேண்டும்.

**விதை விதைத்தல்:**

- நாற்றங்கால் படுக்கைகளில் விதைகளை பரவலாக தூவலாம் அல்லது படுக்கைகளின் குறுக்கே கோடுகளை அமைத்து அதில் விதைகளை ஊன்றலாம். 3 முதல் 6 மி. மீ ஆழத்தில் விதைகளை ஊன்ற வேண்டும்.
- விதைகள் முளைக்கும் வரை ஒரு நாளைக்கு இரண்டு முறை தண்ணீர் ஊற்ற வேண்டும்.
- குறு நாற்றுகளை கையாளுவதில் இழப்புகள் அதிகம் இருக்கும் என்பதால் பாலித்தீன் பைகளில் விதைப்பதற்கு நாற்றுகளின் வயது குறைந்தது ஒரு மாதமாக இருக்க வேண்டும்.
- வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க உலர்ந்த புல், மூங்கில் பாய், பனை ஓலைகள், வைக்கோல் ஆகியவற்றை கொண்டு நிழற்குடைகள் வடக்கு தெற்கு திசை நோக்கி சாய்ந்திருக்குமாறு அமைக்க வேண்டும்.

- விதைகள் நேரடியாகவும் பாலித்தீன் பைகளில் விதைக்கலாம். 22 செ.மீ x 10 செ.மீ அளவு கொண்ட துளையிட்ட பாலித்தீன் பைகளில் மண், மணல் மற்றும் உரம் 6 : 1 : 3 என்ற விகிதாசாரத்தில் கலந்து நிரப்பி சில நாட்கள் விட வேண்டும். விதை விதைக்கும் முந்தைய நாள் பைகளில் தண்ணீர் விட்டு ஒரு பைக்கு இரண்டு விதைகள் வீதம் விதைக்க வேண்டும். இரண்டு விதைகளும் முளைத்தால் ஒன்றை மற்றொரு காலி பாலித்தீன் பைகளில் மாற்ற வேண்டும். ஒட்டுதல் மற்றும் துளிர்த்தல் முறைகளையும் பின்பற்றலாம்.
- நாற்றுகள் நடப்படும் வரை களையெடுத்தல், நீர் பாய்ச்சுதல், உரமிடுதல், கடினப்படுத்துதல், நோய்கள் மற்றும் பூச்சிகளிலிருந்து பாதுகாத்தல் போன்ற பராமரிப்புகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.
- 30 நாட்களுக்கு ஒரு முறை நாற்றுகளை இடம் மாற்றி வைக்க வேண்டும்
- ஒவ்வொரு பைக்கும் இடையில் நான்கு பக்கங்களிலும் இடைவெளி இருக்க வேண்டும்.
- குழாய் வழி நீர்ப்பாசனம், விதைகள் மற்றும் இளம் நாற்றுகளை சேதப்படுத்தும் என்பதால் பூ வாளி மூலம் மட்டுமே தண்ணீர் ஊற்ற வேண்டும்.

X. இணையதளம் மற்றும் செயலியில் பதிவிடுதல்:

- நாற்றங்காலின் அமைவிடம், பரப்பளவு, வேலியின் வகை, நீர் ஆதாரம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு விவரங்கள் TNRD இணைய தளத்தில் பதிவிட வேண்டும்.
- மரக்கன்றுகள் வளர்ச்சி மரக்கன்றுகளின் இருப்பு எண்ணிக்கை, விநியோக விவரங்கள் நாற்றங்கால் செயலியில் பதிவிடப்பட வேண்டும்.
- நாற்றங்கால் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிடம் ஒப்படைக்கும் வரை ஒன்றியமேற்பார்வையாளர் நாற்றங்கால் செயலில் பணி முன்னேற்றம் குறித்து பதிவு செய்திட வேண்டும்.

ஆணையருக்காக

20/3/23